ஆமோஸ்
Sword of the Spirit

ஆசிரியர் குறிப்பு

Sword of the Spirit

- ஆமோஸ் என்பதற்கு ‘துயரத்தைத் தாங்குபவர்’ என்பது பொருள்.
- தென் நாடான யூதாவில், எருசலேமுக்கு பன்னிரண்டு மைல் தொலைவில் வாழ்ந்து வந்தவர்.
- தெக்கோவா என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். அடக்குமுறையின் வலியையும், ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டவர். மந்தை மேய்க்கிறவராகவும், ஏழைகளின் உணவான அத்தி மரங்களைப் பராமரிக்கிறவராகவும் வாழ்ந்து வந்தார்.
- ஆமோஸ் தென்னாடான யூதாவில் பிறந்தவராயினும் வட நாடான இஸ்ரவேலுக்குச் சென்று கி.மு. 762 இல் கர்த்தருடைய வார்த்தையை உரைக்கத் தொடங்கினார். அந்நாளில் அந்நாடு சீரும் சிறப்புமாய் இருந்தது.
- மிகவும் கடுமையான போதனையாய் இவரது போதனைகள் அமைந்திருந்தன..
- ஆமோஸ் கர்த்தருடைய தேவாலயத்தின் பணிகளைக் கற்றவரல்ல. ஆனாலும் கர்த்தருடைய கரம் அவரை வலிமையாய்ப் பற்றிக் கொண்டது. நற்செய்தி அறிவித்தலுக்குத் தேவை கல்வியறிவல்ல, கர்த்தருடைய அழைப்பே என்பதை இவரது வாழ்க்கை நமக்கு புரிய வைக்கிறது.

Sword of the Spirit

வரலாற்றுப் பின்னணி

Sword of the Spirit

இஸ்ரவேல்

- சவுல், தாவீது, சாலொமோன் எனும் மூன்று ராஜாக்களுக்குப் பின், ஒன்றாய் இருந்த இஸ்ரவேல், இரண்டானது.
- வட நாடான இஸ்ரவேல் பெரிய ராஜ்யமானது, பன்னிரண்டில், பத்து கோத்திரங்கள் வடக்கே இணைந்தன. அவர்களுக்கு எருசலேம் தேவாலயமும் இல்லாமல் போக, பெத்தேல், சமாரியா போன்ற இடங்களில் பலிபீடங்களைக் கட்டி வழிபடத் தொடங்கினர்.
- தென் நாடான யூதா தாவீதின் வம்சா வழியின் அரசாட்சியுடனும், எருசலேம் தேவாலயத்துடனும் தனது பயணத்தைத் தொடர்ந்தது.
- இஸ்ரவேல் நாடு செழுமையாய் இருந்த காலகட்டத்தில் தீர்க்கதரிசனம் உரைக்க வந்தவர் தான் ஆமோஸ்.
- இஸ்ரவேல் மக்களை தேவன் மீண்டும் தன் வழிக்குக் கொண்டு வர தண்டனைகளைக் கொடுத்தார்.
  - செல்வத்தை கொண்டாடிய அவர்களின் விளைச்சலை நிறுத்தினார்.
  - வளங்களோடு வாழ்க்கை நடத்திய அவர்களின் நீர் ஆதாரத்தை குறைத்தார்.
  - பயிர்களை அழிக்க வெட்டுக்கிளிகளை அனுப்பினார். விலங்குகளை வலுவிழக்கச் செய்தார்.
  - மனிதர்களுக்கு நோய்களை அனுப்பினார்.

Sword of the Spirit

புத்தகத்தின் நோக்கம்

Sword of the Spirit

- அரசாட்சியில், 2 ஆம் யெரொபெயாமின் நீண்ட மற்றும் பாதுகாப்பான ஆட்சியின் கீழ் செழிப்பு நிறைந்த காலமாகும், அவர் தனது தந்தை யோவாஸ் .
- கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய கனமோ கொடுக்கப்படாத ஊழல் நிறைந்த தீமையான காலமது. (4: 1; 5: 10-13; 2 இரா 14:24).
- நாங்கள் தேவனுடைய பிள்ளைகள், எங்களைக் அவர் கண்டிக்கமாட்டார் என்பது இஸ்ரவேலர்களின் மனநிலையாய் இருந்தது. ஆனால் தேவனாகிய கர்த்தர், “ *பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்..*” என மிகத் தெளிவாக அவர்களைக் கண்டிப்பதற்காக.
- நீதியையும் நேர்மையையும் வளர்த்துக் கொண்டாலன்றி, எந்த ஜனமும் கர்த்தருடைய கடும் கோபாக்கினைக்கு உள்ளாக வேண்டும் என்று எச்சரிக்கை அளிக்க.
- இஸ்ரவேல் ஜனங்கள் மனம் திரும்பினால், தேவனுடைய மன்னிப்பு அவர்களுக்குக் கிடைக்கும் என மனம் திரும்புதலை ஊக்குவிக்க.

Sword of the Spirit

புத்தகத்தின் சுருக்கம்

Sword of the Spirit

- சிறு தீர்க்கதரிசனப் புத்தகங்களின் வரிசையில் இது மூன்றாம் புத்தகம்.
- தீர்க்கதரிசனப் புத்தகங்களுள் முதலில் எழுத்து வடிவம் பெற்றது இந்தப் புத்தகமே.
- மொத்தம் 9 அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகத்தை கீழ் கண்டவாறு பிரிக்கலாம்.

1. 1 : 1 – 2:5 பிற தேசங்களின் மேல் நியாயத்தீர்ப்பு
2. 2 : 6 – 16 இஸ்ரவேலுக்கான நியாயத்தீர்ப்பு
    a. 3 : 1 – 6 : 14 இஸ்ரவேலின் பாவங்கள்
3. 7 : 1 – 9 : 10 ஆமோஸின் தரிசனம்
4. 9 : 11-14 இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய மீட்பின் வார்த்தை

Sword of the Spirit

- வடநாட்டில்(இஸ்ரவேல்) வளங்களுக்குக் குறைவில்லை. ஐசுவரியவாங்கள் மேலும் மேலும் ஐசுவரியவாங்களாகிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் அப்போது கவனிக்கப்படாமல் உதாசீனம் செய்யப்பட்ட தரித்திரரின் ஒரு கூட்டமும் பெருகிக்கொண்டே இருந்தது.
- செல்வம் அங்கே பிரதானமானது. மனித நேயம் மறைந்து போனது. எங்கும் அநியாயமாய் பணம் சேர்க்கும் நிலை உருவானது. நீதிபதிகளும் நீதிகளை விற்கத் துவங்கினர். பாலியல் குற்றங்கள் பரவத் துவங்கின.
- ஓய்வு நாள் தேவனுக்கானது எனும் சிந்தனை மெல்ல மெல்ல மறைய, ஓய்வு நாளிலும் உழைப்போம், பணம் ஈட்டுவோம் எனும் சிந்தனை எங்கும் பரவத் துவங்கியது.
- மக்கள் விளைச்சலுக்காகவும், வளத்துக்காகவும் வேறு தெய்வங்களை நாடத் துவங்கினார்கள். தூய்மை என்பது தூரமாய்ப் போனது.

இந்த காலகட்டத்தில் கர்த்தருடைய குரலாய் வந்த ஆமோஸின் தீர்க்கதரிசன வார்த்தைகள் ஜனங்களைக் கோபமடையச் செய்தன. காரணம் அவருடைய எச்சரிக்கைகள் மக்களுடைய இதயங்களில் மிகப்பெரிய இடியாக இறங்கின.

Sword of the Spirit

பிற தேசங்களின் மேல் நியாயத்தீர்ப்பு

(1:3 – 2:5)

Sword of the Spirit

தமஸ்கு (1:3 - 5)	>> கீலேயத்தை இருப்புக் கருவிகளினால் போரடித்தார்கள். ❑ சீரியாவிலே தீக்கொளுத்துவேன் ❑ சீரியாவின் ஜனங்கள் சிறைப்பட்டுப் போவார்கள்.
காத்சா (பெலிஸ்தியா) (1:6 - 8)	>> ஏதோமியரிடத்தில் ஒப்புவிக்கும்படி முழுதும் சிறையாக்கினார்கள். ❑ காத்சாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன். ❑ குடிகள் சங்காரம் பண்ணப்படுவார்கள்.
தீரு (1:9,10)	>> உடன்படிக்கையை நினையாமல் சிறைப்பட்டவர்களை முழுதும் ஏதோமியர் கையில் ஒப்புவித்தார்கள். ❑ தீருவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன்.
ஏதோம் (1:11,12)	>> பட்டயத்தோடே தொடர்ந்து ,பீறிப்போட்டு மூர்க்கத்தை நித்தியக் காலமாக வைத்திருக்கிறார்கள். ❑ தேமானிலே (வடக்கு ஏதோம்) தீக்கொளுத்துவேன்

Sword of the Spirit
Sword of the Spirit

அம்மோன் (1:13 - 15)	>>கீலேயாத்திலே கர்ப்ப ஸ்திரீகளைக் கீறிப் போட்டார்கள். ❑ ரப்பாவின் மதிலுக்குள் தீக்கொளுத்துவேன். ❑ ராஜாவும், அதிபதிகளும் சிறைப்பட்டுப் போவார்கள்.
மோவாப் (2:1-3)	>> ஏதோமுடைய ராஜாவின் எலும்புகளை சுட்டுப் போட்டான். ❑ மோவாப் தேசத்தில் தீக்கொளுத்துவேன். ❑ மோவாபியர்கள் சாவார்கள்
யுதா (2:4,5)	>> கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம்போனார்கள். ❑ யூதாவிலே தீக்கொளுத்துவேன் ❑ எருசலேமின் அரமனைகள் பட்சிக்கப்படும்

Sword of the Spirit

இஸ்ரவேலின் பாவங்கள் & நியாயத்தீர்ப்பு

(2 : 6 – 6 : 14)

Sword of the Spirit

இஸ்ரவேல் (2:6 - 12 & 13 - 16)	• நியாயத்தைப் புரட்டினார்கள், • தரித்திரை ஒடுக்கினார்கள், • கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள், • தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே குடித்தார்கள், • தீர்க்கதரிசிகளையும், நசரேயரையும் வஞ்சிக்கிறார்கள்.
	❑ நிறை பாரமான வண்டியைப் போல , நீங்கள் இருக்கிற ஸ்தலத்தில் இருத்துவேன். ❑ வேகமானவன், பலசாலி, பராக்கிரமசாலி , வில்லை பிடிக்கிறவன், குதிரையின் மேல் ஏறுகிறவன் , பலசாலிக்குள்ளே தைரியவான் ஒருவனும் தப்புவதில்லை.

Sword of the Spirit

இஸ்ரவேல் (3:10 & 11,14,15)	• செம்மையானதைச் செய்ய அறியாமல், தங்கள் அரமனைகளில் கொடுமையையும் கொள்ளையையும் குவித்துக்கொள்ளுகிறார்கள்.
	❑ சத்துரு வந்து, தேசத்தைச் சூழ்ந்துகொண்டு, உன் பெலத்தை உன்னிலிருந்து அற்றுப்போகப்பண்ணுவான்; அப்பொழுது உன் அரமனைகள் கொள்ளையிடப்படும் .(11) ❑ பெத்தேலின் பலிபீடங்களை விசாரிப்பேன்; பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழும்.(14) ❑ மாரிகாலத்து வீட்டையும் கோடைகாலத்து வீட்டையும் அழிப்பேன்; அப்பொழுது யானைத்தந்தத்தால் செய்யப்பட்ட வீடுகள் அழியும்; பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும்.(15)

Sword of the Spirit

இஸ்ரவேல் (4:1,4,5 & 6 - 11)	• தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி: நாங்கள் குடிக்கும்படிக் கொண்டுவாருங்கள் என்று சொல்லுகிறீர்கள். • பெத்தேலுக்கும், கில்காலுக்கும் போய் துரோகம். • புளித்த மாவுள்ள ஸ்தோத்திர பலியோடே தூபங்காட்டி, உற்சாகபலிகளைச் செலுத்தினார்கள்.
	❑ அப்பக்குறைவு ❑ மழை இல்லாததால் , தாகந்தீர்த்துக்கொள்ள தண்ணீர் இல்லை ❑ கருக்காய், விஷப்பனி, பச்சைப்புழு, மிகுதியான விளைச்சல் அரித்துப்போனது ❑ கொள்ளை நோய் ❑ சோதோம் கொமோராவைப் போல் தேசம் கவிழ்க்கப்பட்டது.

Sword of the Spirit

இஸ்ரவேல் (5:7,10,11,26 & 17,18, 27)	• நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறார்கள். • ஒலிமுகவாசலிலே கடிந்துகொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள். • நீங்கள் தரித்திரனை மிதித்து, அவன் கையிலே தானியத்தைச் சுமைசுமையாய் வாங்குகிறபடியினால், நீங்கள் பொளிந்த கற்களால் வீடுகளைக்கட்டினீர்கள்,... • மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திர ராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டுவந்தீர்களே.
	❑ எல்லாத் திராட்சத்தோட்டங்களிலும் புலம்பல் உண்டாயிருக்கும், நான் உன் நடுவே கடந்துபோவேன் . ❑ கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். ❑ உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன்

Sword of the Spirit

இஸ்ரவேல் (6:6,12,13 & 8,14)	
	• பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள். • நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள். • நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக் கொம்புகளை உண்டாக்கிக்கொள்ளவில்லையோ என்று சொல்லி, வீண்காரியத்தில் மகிழுகிறார்கள்.
	❑ நான் நகரத்தையும் அதின் நிறைவையும் ஒப்புக்கொடுத்துவிடுவேன் ❑ நான் ஒரு ஜாதியை உங்களுக்கு விரோதமாக எழுப்புவேன்.அவர்கள் ……. உங்களை ஒடுக்குவார்கள்

Sword of the Spirit

ஆமோஸின்
5 தரிசனங்கள்

(7 : 1 – 9 : 10)

Sword of the Spirit

- 7 : 1 - 3 >> **வெட்டுக்கிளிகள்** → தேசத்தின் புல்லைத் தின்று தீர்க்க
- 7 : 4 - 6 >> **அக்கினி** → மகா ஆழியைப் பட்சித்தது, அதில் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்ந்தது.
- 7 : 7 - 8 >> **தூக்கு நூல்** → இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்.
- 8 : 1 - 14 >> **பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை** →*(பாவங்கள் மிகுந்த தேசம்)* என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முடிவுகாலம் வந்தது; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்(2). அவர்கள் செயல்களையெல்லாம் நான் ஒரு போதும் மறப்பதில்லை(7).கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன்(11).
- 9 : 1 - 10 >> **பலிபீடத்தின் மேல் நிற்கிற ஆண்டவர்** → கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது(8); அதைப் பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப்போடுவேன்.என் கண்களை அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கென்றே வைப்பேன்(4).

Sword of the Spirit

ஆமோஸூக்கு விரோதமாக அமத்சியா

(7:9 - 17)

அமத்சியா : (பெத்தேலின் ஆசாரியன்) → கர்த்தர் ஆமோஸின் மூலமாக உரைத்த வார்த்தைகளை ராஜாவாகிய யெரொபெயாமுக்குத் தெரியப்படுத்தினான்.

அமத்சியா ஆமோசை நோக்கி : தரிசனம் பார்க்கிறவனே, போ; நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம் தின்று, அங்கே தீர்க்கதரிசனம் சொல்லு.(12)
பெத்தேலிலே இனித் தீர்க்கதரிசனம் சொல்லாதே; அது ராஜாவின் பரிசுத்த ஸ்தலமும் ராஜ்யத்தின் அரமனையுமாயிருக்கிறது என்றான்.(13)

அமத்சியாவுக்கு கர்த்தருடைய பதில் :

உன் பெண்ஜாதி நகரத்தில் வேசியாவாள்; உன் குமாரரும் உன் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்; உன் வயல் அளவு நூலால் பங்கிட்டுக்கொள்ளப்படும்; நீயாவெனில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய்; இஸ்ரவேலும் தன் தேசத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்டுக் கொண்டுபோகப்படுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.(17)

Sword of the Spirit

நீங்கள் தீமையை வெறுத்து,

நன்மையை விரும்பி,

ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்;

ஒருவேளை சேனைகளின் தேவனாகிய கர்த்தர்

யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார்.

Sword of the Spirit

யாக்கோபின் வம்சத்தை
முழுவதும் அழிக்கமாட்டேன்
......
ஜல்லடையினால் சலித்தரிக்கிறது போல்
இஸ்ரவேல் வம்சத்தாரை
எல்லா ஜாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு
நான் கட்டளையிடுவேன்;
ஆனாலும் ஒரு
கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை.

Sword of the Spirit
Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

Sword of the Spirit